**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 23ம் நாள் புதன்கிழமை**

**I.A. No.232/2025**

**in**

**OS.No.1336/2024**

**(CNR.NO. TNVP02-003759-2024)**

விஜியலட்சுமி .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. வீரப்பக்கவுண்டர் (இறந்துவிட்டார்)
2. ஏழுமலை
3. சிவலிங்கம்
4. ராஜேஸ்வரி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 22.04.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 17.07.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருபாபுரி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார். 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ராஜகோபால், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் இம்மனு பிரிவு கட்டளை 16 விதி 1 சி.பி.சி-யின் கீழ் மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியை விசாரணை செய்யும் பொருட்டு அவருக்கு சாட்சி சம்மன் அனுப்பக்கோரி பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் இம்மனுவில் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் பேரில் வழக்கு தாக்கல் செய்து மனுதாரர்/வாதி தரப்பில் விசாரணை நடைபெற்று வருவதாகவும், வழக்கு "பி" ஷெட்யூல் சொத்தை மனுதாரர் அனுபவித்து வந்த விபரமும், வழக்கு "சி" ஷெட்யூல் சொத்துக்ளை 1ம் பிரதிவாதி, இந்த வாதியும் சேர்ந்து அனுபவித்து வந்த விபரமும் 1ம் பிரதிவாதியின்/1ம் மனுதுாரரின் சகோதரியான ஆண்டாள் அம்மாளுக்கு நன்கு தெரியும் என்றும், மனுதாரர் ஆண்டாள் அம்மாளை இவ்வழக்கில் சாட்சி சொல்ல அழைத்ததற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தால் மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியும் என தெரிவித்துவிட்டதாகவும், அதனால் அவருக்கு சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்யும் பொருட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையை 3, 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரரின் மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தள்ளுபடிக்கு உகந்தது என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் குறிப்பிடும் ஆண்டாள் என்பவர் ராமச்சந்திரனின் குமாரத்தி ஆவார். அந்த வகையில் மேற்படி ஆண்டாள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார் என்றும், அந்த வகையில் மேற்படி ஆண்டாள் என்பவரை மனுதாரர் தரப்பில் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி

நிலைக்கத்தக்கது அல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வுக்கான பிரச்சினை :-**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**6. தீர்வு :-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர் தரப்பில் தான் வாதி என்றும், மனுதாரர்/வாதி வழக்கு "பி" ஷெட்யூல் சொத்தை மனுதாரர் அனுபவித்து வந்த விபரமும், வழக்கு "சி" ஷெட்யூல் சொத்துக்களை 1ம் பிரதிவாதி, இந்த வாதியும் சேர்ந்து அனுபவித்து வந்த விபரமும் 1ம் பிரதிவாதியின்/1ம் மனுதுாரரின் சகோதரியான ஆண்டாள் அம்மாளுக்கு நன்கு தெரியும் என்றும், அதனால் அவருக்கு சாட்சி சம்மன் அனுப்பி விசாரணை செய்யப்படவேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் குறிப்பிடும் ஆண்டாள் என்பவர் ராமச்சந்திரனின் குமாரத்தி ஆவார். அந்த வகையில் மேற்படி ஆண்டாள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார் என்றும், அந்த வகையில் மேற்படி ஆண்டாள் என்பவரை மனுதாரர் தரப்பில் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், இந்நிலையில் இம்மனு அனுமதிக்கக்கூடாது என்றும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

9. விசாரணை நீதிமன்றங்களில் இருதரப்பினர்களுக்கும் முழுமையான வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டியது கட்டாயமானதாகும். விசாரணை நீதிமன்றங்களில் ஒவ்வொரு சாட்சியையும், விசாரணை செய்து, தீர்வு காண்பதுதான் நீதியின் நலனுக்கு உகந்தாக இருக்கும், மேலும் அசல் வழக்கில் மனுதாரர் ஆண்டாள் என்பவரை மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக இருந்தாலும். இந்நிலையில் ஆண்டாள் அம்மாளை இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்து அவர் அவசிய தரப்பினரா இல்லையா என்பது பற்றிய கேள்விகள் கேட்டு விசாரணை செய்யும்போது இந்த வழக்கின் தன்மை தெரியவரும். எனவே ஆண்டாள் அம்மாளை மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க கோரிய மனு அனுமதிக்கத்தக்கது என இம்மனுவில் முடிவு காணப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 23.07.2025 இன்று பகரப்பட்டது.

A TAMILSELVAN
Digitally signed by A TAMILSELVAN
Date: 2025.07.25 13:02:21 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

A TAMILSELVAN
Digitally signed by A TAMILSELVAN
Date: 2025.07.25 13:02:41 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.